19th December 1956]

Sri R. NATARAJA MUDALIAR : இப்பொழுது நம் ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டிருக்கும் தமிழ் தாலூகாக்களையும் திருநெல்வேலி ஜில்லா ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசரே பார்த்துக்கொண்டுவருகிறார். தனியாக அங்கே ஒரு ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் போடுவதற்கு சர்க்காருக்கு உத்தேசம் இருக்கிறதா ? அல்லது அவர்களே தொடர்ச்சியாக இந்தப் புது தாலூக்காக்களையும் பார்த்துவருவார்களா ?

The Hon. Sri B. PARAMESWARAN : அங்கே தனியாக ஒரு ரீஜனல் டிரான்ஸ்போர்ட் ஆபீசர் போடுவதற்கு அரசாங்கத்தார் இன்னும் இரண்டு, மூன்று வாரங்களில் ஏற்பாடு செய்வார்கள்.

Sri K. VINAYAKAM : Before the merger took place, bona fide students who were travelling in the Government Transport buses in Travancore-Cochin State were allowed concessions. Such concessions have been denied to students in the Tamil areas after they are transferred to this State by our Government. A representation on this subject was made to the Hon. Minister. I wish to know whether the Government have restored the concessions enjoyed by bona fide students in the Tamil areas merged with this State?

The Hon. Sri B. PARAMESWARAN : That matter is under the active consideration of the Government.

Sri V. BALAKRISHNAN : மாணவர்களுக்கு கொடுத்துக்கொண்டு வந்திருந்த சலுகைகள் என்னென்ன ?

The Hon. Sri B. PARAMESWARAN : தனி கேள்வி போட்டால் சொல்லுகிறேன்.

Improvement of Central Jail, Pudukkottai

* 377 *Q*.—Sri V. BALAKRISHNAN : Will the Hon. the Minister for Finance be pleased to state the steps taken for the improvement of the Central Jail, Pudukkottai, after the merger of the State with Madras State?

The Hon. Sri C. SUBRAMANIAM : A statement showing the important events and notable administrative measures undertaken in the District Jail, Pudukkottai, is placed on the table [a] of the House.

Sri V. BALAKRISHNAN : இதர ஜெயில் ஸ்தாபனங்களைக் காட்டிலும் புதுக்கோட்டை ஜெயில் கட்டிடம் அதிக சௌகரியமுள்ளதாகவும், வசதியுள்ளதாகவும் இருப்பதால், அந்த ஜெயிலில் போய் வாழவேண்டுமென்று பொது மக்கள் விரும்புகிறார்கள் என்பதை மந்திரி அவர்கள் அறிவார்களா? (சிரிப்பு).

The Hon. Sri C. SUBRAMANIAM : அங்கத்தினர்கள் மற்றவர்கள் பின்பற்றுகின்ற வழிகளை நடைமுறையில்காண்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். (பலத்த சிரிப்பு.)

---

[a] **Printed as Appendix II on page 235 infra.**